

மதுரை கிழக்கு தொகுதிக்குட்பட்ட கிழக்கு ஒன்றிய பகுதிகளில் 20 கோடியே 72 லட்சம் மதிப்பிலான 115 முடிவுற்ற திட்டப் பணிகளை கிராமம் கிராமமாக சென்று வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, சிறப்பு மக்கள் குறைதீர் முகாம் மூலம் பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களையும் பெற்று உடனடி நடவடிக்கை எடுக்க அதிகாரிகளை அறிவுறுத்தினார். உடன் சோழவந்தான் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டப் பொறுப்பாளர் கே.எம். ராஜு தலைமையில் உதகையில் நடைபெற்ற தமிழ்நாடுபோராடும் தமிழ்நாடு வெல்லும் கண்டன பொதுக்கூட்டத்தில் தலைமை அரசு கொறடா கா.ராமச்சந்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பா.மு.முபாரக், மாவட்ட அவைத்தலைவர் போஜன் மற்றும் பலர் இதில் பங்கேற்றனர்.

### பெண்கள் – குழந்தைகளுக்கு எதிரான சைபர் குற்றத் தடுப்புத் திட்டத்துக்காக

# தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு ஒதுக்கிய நிதி எவ்வளவு?

## மக்களவையில் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 13 -

**பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சைபர் குற்றத் தடுப்பு (CCPWC) திட்டம் பற்றிய எழுத்துபூர்வமான கேள்விகளை தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. மார்ச் 11ஆம் தேதி எழுப்பியினார்.**

இது பற்றிய விவரம் வருமாறு:-

"பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சைபர் குற்றத் தடுப்பு (CCPWC) திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட, மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி விவரங்கள் மாநில வாரியாக மற்றும் ஆண்டு வாரியாக என்ன? என்று

இந்தத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களில் நிறுவப்பட்ட சைபர் தடயவியல் ஆய்வகங்கள் மற்றும் பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு? என்றும்,

பெண்கள் மற்றும் குழந்தை களுக்கு எதிரான சைபர் குற்றங்கள் அதிகரிப்பதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னென்ன? என்றும்,

சைபர் குற்ற வழக்குகளை விரைவாகத் தீர்ப்பதற்காக மாநில மற்றும் ஒன்றிய அரசு நிறுவனங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்த செயல்படுத்தப்படும் நடவடிக்கைகள் என்ன?" ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. எழுப்பி யிருந்தார்.

இந்த கேள்விகளுக்கு ஒன்றிய உள்துறை இணையமைச்சர் பண்டி சஞ்சய் குமார் அளித்த பதில் வருமாறு:-

"இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையின்படி 'காவல்துறை' மற்றும் 'பொது ஒழுங்கு' ஆகியவை மாநிலங்களின் அதிகார வரம்புக்குள் வருபவை. அதனால், சைபர் குற்றம் உள்ளிட்ட குற்றங்களைத் தடுத்தல், கண்டறிதல், விசாரணை செய்தல் மற்றும் வழக்குத் தொடுத்தல் ஆகியவை மாநில, யூனியன் பிரதேங்களின் முதன்மைப் பொறுப்பாகும்.

மாநில விசாரணை அமைப்புகளின் திறன் மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்க ளின் கீழ் ஆலோசனைகள் மற்றும் நிதி உதவியைஒன்றிய அரசுசெய்துவருகிறது.

தகவல் தொழில்நுட்பச் (2000) சட்டத்தின்படி ஐ.டி. சேவையாளர்களால் கட்டுப்படுத்தப்படும் கணினி வளத்தில் இருக்கும் அல்லது இணைக்கப்பட்ட தகவல், தரவு அல்லது தகவல் தொடர்பு இணைப்பு நிகழ்வுகளை கண்காணிக்கவும், சட்ட விரோத செயல்பாடுகளை அறிவிக்கை செய்யவும் இந்திய சைபர் குற்ற ஒருங்கிணைப்பு மையத்தை (Indian Cyber Crime Coordination Centre) ஒன்றிய அரசு அமைத்தது.

பெண்கள் மற்றும் குழந்தை களுக்கு எதிரான சைபர் குற்றங்கள் உள்ளிட்ட சைபர் குற்றங்களை விரிவான மற்றும் ஒருங்கிணைந்த முறையில் கையாள்வதற்கான வழிமுறையை வலுப்படுத்த, ஒன்றிய அரசு பின்வருவனவற்றை உள்ளடக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.



#### மாநில அரசுகளின் விசாரணை அமைப்பு!

உள்துறை அமைச்சகம், 'பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சைபர் குற்றத் தடுப்பு (CCPWC)' திட்டத்தின் கீழ், மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு, சைபர் தடயவியல் மற்றும் பயிற்சி ஆய்வகங்களை அமைத்தல், ஜூனியர் சைபர் ஆலோசகர்களை பணியமர்த்துதல் மற்றும் மாநில அரசுகளின் விசாரணை அமைப்புகளின் பணியாளர்கள், அரசு வழக்கறிஞர்கள் மற்றும் நீதித் துறை அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்தல் போன்ற திறன் மேம்பாட்டிற்காக நிதி உதவி வழங்கி வருகிறது.

CCPWC திட்டம் தொடங்கப்பட்ட 2017 முதல் 31.03.2024 வரை மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கு மொத்தம் 132.93 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தமிழ்நாட்டுக்கு 2017-18 நிதியாண்டில் 2.99 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதன் பின், 2021-22 இல் 35 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. அதன் பின் தமிழ்நாட்டுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்படவில்லை.

CCPWC திட்டத்தின் கீழ் சைபர் தடயவியல் மற்றும் பயிற்சி ஆய்வகங்கள் 33 மாநிலங்கள்யூனியன் பிரதேசங்க ளில் தொடங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் சைபர் தடயவியல் மற்றும் பயிற்சி ஆய்வகம் நிறுவப்படவில்லை.

#### சைபர் குற்றங்களுக்கு எதிரான விசாரணை!

சைபர் குற்றங்களுக்கு எதிரான விசாரணை மற்றும் வழக்கு தொடர்வதை சிறப்பாகக் கையாள்வதற்காக மாநில விசாரணை அமைப்புகளின் பணியாளர்கள், பொது வழக்கறிஞர்கள் மற்றும் நீதித் துறை அதிகாரிகளுக்கு பயிற்சி பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. பயிற்சித் திட்டங்களை ஒழுங்கமைக்க மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களிடம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் அடிப்படையில் இதுவரை 24,600க்கும் மேற்பட்ட மாநில விசாரணை அமைப்புகளின் பணியாளர்கள், அரசு வழக்கறிஞர்கள் மற்றும் நீதித் துறை அதிகாரிகளுக்கு சைபர் குற்றம் விழிப்புணர்வு, விசாரணை, தடயவியல் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள அனைத்து வகையான சைபர் குற்றங்களையும் ஒருங்கிணைந்த மற்றும் விரிவான முறையில் கையாள்வதற்காக இணைக்கப் பட்ட அலுவலகமாக உள்துறை அமைச்சகம் 'இந்திய சைபர் குற்றம் ஒருங்கிணைப்பு மையம்' அமைத்துள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சைபர் குற்றங்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்தி, அனைத்து வகையான சைபர் குற்றங்கள் தொடர்பான சம்பவங்களையும் பொதுமக்கள் புகாரளிக்க உதவும் வகையில், 'தேசிய சைபர் குற்ற அறிக்கையிடல் போர்ட்டல்' (https://cybercrime.gov.in) தொடங்கப்பட்டுள்ளது. இந்த போர்ட்டலில் பதிவாகும் சைபர் குற்ற சம்பவங்கள், அவை FIR ஆக மாற்றப்படுவது மற்றும் அதன் மீதான நடவடிக்கை ஆகியவை சட்ட விதிகளின்படி சம்பந்தப்பட்ட மாநில யூனியன் பிரதேச காவல்துறையினரால் கையாளப்படுகின்றன.

ஆன்லைனில் குழந்தை ஆபாசப் படங்கள் மற்றும் குழந்தை பாலியல் சுரண்டல் உள்ளடக்கங்கள் குறித்த 'டிப்லைன் அறிக்கையை' பெறுவது தொடர்பாக இந்தியாவின் தேசிய குற்றப் ஆவணக் காப்பகம் (NCRB) மற்றும் அமெரிக்காவின் காணாமல் போன மற்றும் சுரண்டப்பட்ட குழந்தைகளுக்கான தேசிய மையம் (NCMEC) இடையே 26.04.2019 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது. இதன்படி, இதுவரை, 69 லட்சத்திற்கும் மேற்பட்ட சைபர் டிப்லைன் அறிக்கைகள் சம்பந்தப்பட்ட மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுடன் பகிரப்பட்டுள்ளன.

தேசிய சைபர் தடயவியல் ஆய்வகம் (சான்றுகள்) 14.05.2022 அன்று ஹைதராபாத்தில் திறக்கப்பட்டது. இந்த ஆய்வகம் சைபர் குற்றம் தொடர்பான சாட்சிய வழக்குகளில் தேவையான தடயவியல் ஆதரவை வழங்குகிறது, ஐடி சட்டம் மற்றும் சான்றுகள் சட்டத்தின் விதிகளுக்கு ஏற்ப ஆதாரங்களையும் அதன் பகுப்பாய்வையும் பாதுகாக்கிறது. இதன் மூலம் விசாரணைக் காலத்தை 50% குறைக்கப்படுகிறது.

மாநில, யூனியன் பிரதேச காவல்துறையின் விசாரணை அதிகாரிகளுக்கு (IOக்கள்) ஆரம்ப கட்ட சைபர் தடயவியல் உதவியை வழங்குவதற்காக, புது டெல்லியில் I4C இன் ஒரு பகுதியாக அதிநவீன 'தேசிய சைபர் தடயவியல் ஆய்வகம் (விசாரணை)' நிறுவப்பட் டுள்ளது. இதுவரை இந்த ஆய்வகம் மாநில, யூனியன் பிரதேச விசாரணை அமைப்புகளுக்கு சைபர் குற்றங்கள் தொடர்பான சுமார் 11,835 வழக்குகளில் சேவைகளை வழங்கியுள்ளது.

இந்திய சைபர் குற்ற ஒருங்கிணைப்பு மையத்தின் ஒரு பகுதியாக சைபர் மோசடி குறைப்பு மையம் நிறுவப்பட்டுள்ளது, அங்கு முக்கிய வங்கிகளின் பிரதிநிதிகள், நிதி நிறுவன பிரதிநிதிகள், கட்டண ஒருங்கிணைப்பாளர்கள், தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்கள், ஐடி சேவை நிறுவன பிரதிநிதிகள் மற்றும் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் காவல்துறை பிரதிநிதிகள் ஒருங்கிணைக்கப்படுகிறார்கள். சைபர் குற்றங்களின் மீதான உடனடி நடவடிக்கை மற்றும் தடையற்ற ஒத்துழைப்புக்காக இந்த மையம் செயல்படுகிறது.

நாடு முழுவதும் உள்ள சைபர் குற்றங்கள் அதிகமாக நடக்கும் ஹாட் ஸ்பாட்டுகளின் அடிப்படையில், மாநிலங்கள்யூனியன் பிரதேசங்களின் விசாரணை அமைப்புகளிடையே ஒருங்கிணைப்பு கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக... மேவாட், ஜம்தாரா, அகமதாபாத், ஹைதராபாத், சண்டிகர், விசாகப்பட்டினம் மற்றும் குவஹாத்தி ஆகிய இடங்களில் ஏழு கூட்டு சைபர் ஒருங்கிணைப்பு குழுக்கள் (JCCTகள்) அமைக்கப்பட்டுள்ளன. இந்த பகுதிகளில் இந்த குழுக்களுக்கான பயிற்சிப் பட்டறைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சைபர் குற்ற தரவு பகிர்வு மற்றும் பகுப்பாய்வுகளுக்கான மேலாண்மை தகவல் அமைப்பு (MIS) தளம், தரவு களஞ்சியம் மற்றும் மாநில விசாரணை அமைப்புகளுக்கான ஒருங்கிணைப்பு தளமாக செயல்பட "சமன்வயா" தளம் செயல்படத் தொடங்கியுள்ளது.

இது பல்வேறு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் சைபர் குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் பற்றிய பகுப்பாய்வு அடிப்படையிலான விவரங்களை பகிர்ந்துகொள்ள இணைப்பினை வழங்குகிறது.

#### அதிகாரிகளுக்கு தொழில்நுட்ப வசதி!

மேலும் பிரதிபிம்ப் (Pratibimb) என்ற சாஃப்ட்வேர் உருவாக்கப்பட்டுள்ளது. இது சைபர் குற்றவாளிகள் மற்றும் குற்ற உள்கட்டமைப்பு இருப்பிடங்களை வரைபடமாக்கி வழங்குகிறது. இதன் மூலம் விசாரணை அதிகாரிகளுக்கு தொழில்நுட்ப உதவியும், சட்ட உதவியும் கிடைக்கிறது. இந்த சாஃப்ட்வேர் உதவியுடன் இதுவரை 6046 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 17,185 சைபர் குற்ற இணைப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. சைபர் புலனாய்வுக்கான 36,296 உதவிக் கோரிக்கைகள் இந்த சாஃப்ட்வேருக்கு வந்துள்ளன

ஐ.டி. சட்டம் 2000 ஆம் ஆண்டு ஐடி சட்டத்தின் பிரிவு 79 இன் துணைப்பிரிவு (3) இன் பிரிவு (b) இன் கீழ், ஐடி நிறுவனங்களுக்கு நோட்டீஸ் அனுப்பும் செயல்முறையை விரைவுபடுத்து வதற்காக 'சஹயோக்' போர்டல் தொடங்கப்பட்டுள்ளது, இது சட்டவிரோத செயலைச் செய்யப் பயன்படுத்தப்படும் எந்தவொரு தகவல், தரவு அல்லது தகவல் தொடர்பு இணைப்பையும் அகற்ற அல்லது முடக்க உதவுகிறது.

மேலும், சைபர் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதற்காக, ஒன்றிய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இவற்றில் குறுஞ்செய்தி, சமூக ஊடகப் பிரச்சாரம், வானொலி பிரச்சாரம், செல்போன்களில் பயன்படுத்தப்படும் காலர் டியூன் மூலம் பல ஊடகங்களில் விளம்பரங் கள் செய்யப்பட்டு வருகின்றன.

மாநிலங்கள், யூனியன் பிரதேசங்க ளுடன் இணைந்து சைபர் பாதுகாப்பு, விழிப்புணர்வு வாரங்களை ஏற்பாடு செய்தல், இளம் பருவத்தினர்/மாணவர்களுக்கான கையேடு வெளியிடுதல், டிஜிட்டல் கைது மோசடி குறித்த செய்தித்தாள் விளம்பரம், டிஜிட்டல் கைது குறித்து டெல்லி உள்ளிட்ட பெருநகரங்களில் அறிவிப்பு, டிஜிட்டல் கைது குறித்த ரயில் நிலையங்கள் மற்றும் விமான நிலையங்களில் டிஜிட்டல் பலகைகள் வைத்திடல் போன்றவை மூலமாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றன" என்று ஒன்றிய உள்துறை இணையமைச்சர் பதிலளித்துள்ளார்.




சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் நகர தி.மு.க. சார்பில் ஒரே இலக்கு தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! என்ற ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் ஆத்தூர் ராணிப்பேட்டை கலைஞர் திடலில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட துணைச் செயலாளர் சின்னதுரை, மாவட்ட அவைத் தலைவர் முரா.கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகரச் செயலாளர் பாலசுப்பிரமணியம் வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம், தலைமை கழகப் பேச்சாளர் பவானி கண்ணன், ஆவடி பாஸ்கர், ஏர்போர்ட் பொன்னுசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சியினர் பலர் கலந்துகொண்டனர்.

# இந்தித் திணிப்புக்கு இன்னுமொரு சாட்சி!

மும்மொழி என்று தான் சொல்கிறோமே தவிர இந்தியைத் திணிக்கவில்லை என்று சொல்லிக்கொள்பவர்களுக்கு இதோ ஒரு சாட்சி.




11/3/25 அன்று தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ்ச் சாலை, எழும்பூர், சென்னை 600 008 என்ற முகவரிக்கு உதவியாளரிடம் கொடுத்து ஒரு பதிவஞ்சல் அனுப்பினேன். அது படூர் அஞ்சல் நிலையத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளது.

12/3/25 பிற்பகல் அஞ்சல் துறையிலிருந்து ஒரு குறுஞ்செய்தி வந்தது. அதில் முதல்வர் அலுவலகத்துக்கு அனுப்பிய கடிதம் கொடுக்கப்பட்டுவிட்டது என்று இருந்தது,.

நான் முதலமைச்சர் அலுவலகத்துக்கு ஒன்றும் கடிதம் அனுப்பவில்லையே என்று பதிவஞ்சல் இரசீதைப் பார்த்தால் அதில் To CM Office ,Egmore, PIN 600 008.என்று இருந்தது.

முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், அது சென்னை 9 ஆயிற்றே என்று விசாரித்தபோதுதான் தெரிய வந்தது, இந்தித் திணிப்பின் நூதன வழிமுறைகள்.

பழைய மாமல்லபுரம் சாலையில் உள்ள, செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த படூர் அஞ்சல் நிலையத்தில் பணியாற்றுகிறவர்களுக்குத் தமிழ் தெரியாதாம். ஆங்கிலம் ஓரளவுக்குத் தெரிகிறது. இந்தியில் சரளமாகப் பேசுகிறார்கள்.

நான் அனுப்பிய பதிவஞ்சலில் முகவரி தமிழில் இருந்ததால், To CM OFFICE Egmore என்று பதிவு செய்து அனுப்பியிருக்கிறார்கள்.

**தமிழ் நாட்டில் சாதாரணமான ஒரு ஊரில் உள்ள அஞ்சல் நிலையத்தில் பணியாற்றுகிறவர்களுக்குத் தமிழ் தெரியவில்லை. தமிழில் எழுதிக்கொண்டு போனால் ஆங்கிலம் அல்லது இந்தியில் எழுதிக்கொண்டு வரச் சொல்கிறார்களாம்.**

இரயிலின் பெயர்கள் எல்லாம் வடமொழியில்; சட்டங்கள் திட்டங்களின் பெயர்களில் எல்லாம் வடமொழி. இப்போதெல்லாம் இரயிலில் பயனம் செய்தால் தண்ணீர் வேண்டுமானாலும் இந்தியில் பாணி என்றோ தண்டபாணி என்றோதான் கேட்க வேண்டி இருக்கிறது. இந்தியைத் திணிப்பதற்கே வேண்டுமென்றே இந்தி மட்டும் தெரிந்தவர்களைத் தமிழகத்தின் ஒன்றிய அரசின் அனைத்துத் துறைகளிலும் திணித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

**ஆகாஷ்வாணியை வானொலியாக மாற்றச் செய்தோம்; மீண்டும் ஆகாஷ்வாணி ஆகியிருக்கிறது; சென்னைத் தொலைக்காட்சி, தூர்தர்ஷன் ஆக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தை எடுத்துவிட்டு இந்தி வந்து உட்கார எல்லா வேலைகளையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் மும்முரமாகச் செய்யத் தொடங்கிவிட்டார்கள். அன்று இந்தியை எதிர்த்தவர்கள் தமிழக மாணவர்கள் என்பதால் இப்போது சாக்லெட்டைக் கொடுத்து மாணவர்களிடம் கையெழுத்து வாங்க முயற்சி செய்கிறார்கள்.**

போகிற போக்கைப் பார்த்தால் இந்தியாவைப் பாரத் என்று அழைப்பதைப்போலத் தமிழ்நாட்டையும் அகஸ்திய தேசம் என்று அழைக்கத் தொடங்கிவிடுவார்கள் போல!

**முனைவர் ம.இராசேந்திரன்**



### மாவட்டச் செயலாளர் எஸ்.கல்யாணசுந்தரம் எம்.பி. தலைமையில்

# தஞ்சை வடக்கு மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய / நகர / பேரூர்க் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

திராவிட முன்னேற்ற கழக பொறியாளர் அணி

## மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

தஞ்சாவூர் வடக்கு மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய / நகர / பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல் மாவட்டச் செயலாளர் எஸ்.கல்யாணசுந்தரம் எம்.பி. தலைமையில் நடைபெற உள்ளது.

இதில் பொறியாளர் அணிக்கு தஞ்சாவூர் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய / நகர / பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு QR CODE மூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாள் : (16.03.2025 ஞாயிற்றுக்கிழமை) நேரம்: காலை 10.00 மணிக்கு

இடம் : ஹோட்டல் மிளகு, (ரயில்வே ஸ்டேஷன் அருகில்) கும்பகோணம்.

**எஸ்.கே.பி.கருணா**
மாநிலச் செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி.



தருமபுரி மேற்கு மாவட்டம் தீர்த்தமலையில் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு அரூர் கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட 12 ஊராட்சிகளில் உள்ள 150 துப்புரவுப் பணியாளர்களுக்கு வேட்டி,புடவைகளை ஒன்றிய செயலாளர் கோ.சந்திரமோகன் தலைமையில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் வழங்கினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் பொறியாளர் சி.கிருஷ்ணகுமார், தென்னரசு, கிருஷ்ணமூர்த்தி, ராஜா, செந்தில்குமார் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.